# பதவிகள் - வெற்றிடம்

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

*கலாசார அலுவல்கள் திணைக்களம்*

## ஆலோசகர் (நடனம்/இசை) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்த்தல்

*கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் காணப்படும் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.*

| | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| i. | ஆலோசகர் (நடனம்) | 01 |
| ii. | ஆலோசகர் (இசை) | 01 |

*இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப* A4 *அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2021.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடிதத உறையின் இடது பக்கமேல் மூலையில் "ஆலோசகர் (நடனம்/இசை)" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். இந்த அறிவித்தலை* www.culturaldept.gov.lk *என்ற வலைத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.*

*02.* **சேவையை வலுவூட்டுதல் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

I. *ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதோடு ஒரு வருட ஒப்பந்த காலத்திற்கு நியமிக்கப்படுவர்;*
II. *சம்பளம் : ரூ. 35,000.00 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.*

*03.* **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள்:**
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் அழகியற்கலை பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

*தேசிய நடனம்/இசைக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே அறிவியல் பீடத்தின் விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்*

II. **தொழிற் தகைமைகள்:** *பொருத்தமற்றது.*
*(செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தொழிற் தகைமைகள் மேலதிக தகைமைளாகக் கருதப்படும்)*

III. **அனுபவம்:** *விசேட தகைமைகளாகக் கருதப்படும்.*
*(எழுத்து மூலமாக உறுதிப்படுத்தக்கூடிய 10 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்திற்கு செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.)*

IV. **உடற் தகைமைகள்:**

i. *சகல விண்ணப்பதாரர்களும் பதவியில் கடமை மேற்கொள்வதற்கும், நாடளாவிய ரீதியில் எந்த பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்;*
ii. *உயரம் 5 அடி 3 அங்குலத்திற்குக் குறையாது இருத்தல்.*

V. **ஏனைய தகைமைகள் :**

i. *சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த பண்புகளையும் உடல் ஆரோக்கியத்தையும் கொண்டிருக்க வேண்டும்.*
ii. *பதவிக்கு ஆட்சேர்த்தலுக்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு குறித்த தகைமைகள் யாவும் பூர்த்தி செய்திருக்கப்பட வேண்டும்.*

04. **வயதெல்லை** : விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவாறும் 60 வயதுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்த்தல் முறை** :

- செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுக்கமைய ஆட்சேர்க்கப்படும்.

செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள்<br>* நடனம்/இசை விடயம் தொடர்பான பட்டப்பின் படிப்பு - 10 புள்ளிகள்<br>* பட்டத்திற்கு மேலதிகமாக நடனம்/இசை விடயம் தொடர்பான கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் - 05 புள்ளிகள் | 15 | பொருத்தமற்றது |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம்<br>* 15 வருடங்களுக்கு மேல் - 25 புள்ளிகள்<br>* 10 - 15 வருடங்கள் வரை - 20 புள்ளிகள்<br>* 10 வருடங்கள் - 15 புள்ளிகள் | 25 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>* தேசிய மட்டத்தில் சுய நடன/ இசை ஆக்கங்களை முன்வைத்திருத்தல் - 05 புள்ளிகள்<br>* சர்வதேச மட்டத்தில் சுய நடன/ இசை ஆக்கங்களை முன்வைத்திருத்தல் - 05 புள்ளிகள்<br>* பரம்பரை நடன/ இசை கலைஞராக இருத்தல் - 05 புள்ளிகள்<br>* நடன/இசை பேராசிரியராக அனுபவம்- 10 புள்ளிகள் (05 வருடங்களுக்கு மேலதிகமான ஒவ்வொரு வருடத்திற்கும் 01 புள்ளி வீதம்)<br>* ஆக்க வடிவமைப்பு அனுபவம் - 10 புள்ளிகள் (வருடமொன்றுக்கு 01 புள்ளி வீதம்) | 35 | |
| 4. மொழித்திறன்<br>* அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான முழு நேர டிப்ளோமா பாடநெறியை பின்பற்றியிருத்தல் | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | 10 | |
| மொத்தம் | 100 | |

06. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்**.- விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதியுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. தேசிய நடனம்/இசைக்கான இறுதிப் பரீட்சை/பாத்கண்டே அறிவியல் பீடத்தின் விசாரத பரீட்சை :

| *வழங்கப்பட்ட திகதி* | *சித்தியடைந்த பரீட்சை* | *நிறுவனம்/பல்கலைக்கழகம்* |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :
12. அனுபவம் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனக்கு தெரிந்தளவில் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானதென அல்லது தவறானதென கண்டறியப்படுமாயின் நான் பொருத்தமற்றவரெனவும் நியமிக்கப்பட்ட பின்னர் அது உறுதிப்படுத்தப்படுமாயின் நியமனம் இரத்துச்செய்யப்படக்கூடியது என்பதனையும் நான் அறிவேன்.

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..................

08-353

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**கல்வி அமைச்சு**

இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக 2,231 மற்றும் 2021.06.04 ஆந் திகதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட பரீட்சை அறிவிப்பில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை முதிர்ச்சியும் திறமையும் அடிப்படையில் நடத்தப்பட வேண்டிய போட்டிப் பரீட்சைகளுக்கு பொதுவான திருத்தங்கள் பின்வருமாறானதாகும்.

* இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளுக்கான தோற்றும் தடவைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படுவது இலக்கம் 1928/ 28 மற்றும் 21.08.2015 ஆந் திகதிய புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு செயற்படுத்தப்படும் நாளிலிருந்து ஆகும்.

* விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி தினம் 2021.09.03 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

* உரிய ஏனைய அனைத்து தகைமைகளும் 2021.07.30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

* 2021.07.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.

மேற்கண்ட திருத்தங்களுக்கு மேலதிகமாக, மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு பின்வரும் திருத்தங்கள் உரியதாகும்.

*இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் தரத்துக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - (2020/2021)*

**09**. (III) *கீழ் அட்டவணை 03 இன் 11 - மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் என்ற விடயத்தின் கீழ் பொதுவாக குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புத் தகைமைகளுக்கு மேலதிகமாக, அந்த பாடத்திற்கு மட்டுமே பொருந்துமாறு பின்வரும் தகைமைகள் சேர்க்கப்பட்டுள்ளன.*

(III)*(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பெற்றுக்கொண்ட உளவியலில் விசேட பட்டம்.*

*அல்லது*

*(ஆ) கல்விமாணி விசேட பட்டத்துக்காக மொத்த பாட அலகுகளின் எண்ணிக்கையில் குறைந்தது 1/ 3 ஐ உள்ளடக்கியவாறு ஆலோசனை அல்லது உளவியல் விடயத்தை கற்றிருத்தல்.*

**09**. (III) *இன் கீழ் காட்டப்பட்ட அட்டவணை 03 இற்கு கீழுள்ள புதிய குறிப்பு உட்சேர்க்கப்படுகின்றது.*

**குறிப்பு** : *விசேட ஆளணியினர் வெற்றிடத்துக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களால் மேற்குறித்த அட்டவணையில் உரிய விடயத்துறைக்குரிய ஒரு கல்வி தகைமையாவது அல்லது உரிய விடயத்துறைக்கு உரிய 4.1 (ஆ) இல் குறிப்பிட்ட கல்வி தகைமையாவது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.*

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

*2021.08.10.*

*08-412*

---

திருத்தம்

**அமைச்சரவை அலுவலகத்தில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று சேவை வகுதி - தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021**

இலக்கம் 2237 மற்றும் 2021.07.16 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்போந்த விடயம் சம்பந்தமான அறிவித்தல் தொடர்பில்,

மேற்போந்த அறிவித்தலின் 8(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது 2021, செத்தெம்பர் 10 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கு இதுவரையில் விண்ணப்பப்படிவங்களை ஏற்கனவே சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லையென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

அமைச்சரவைச் செயலாளர்.

அமைச்சரவை அலுவலகம்,
குடியரசு கட்டடம்,
சேர் பாரொன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு - 01,
2021, ஓகத்து 20.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.